Deposition of Witness
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE JUDICIAL MAGISTRATE, VANIYAMBADI.

Case No.STC.No. 400 / 2024

**DEPOSITION OF PETITIONER SIDE WITNESS No.1**

| | | | |
|---|---|---|---|
| Name: | பூபதி | Calling: | இரயில்வே மேனேஜர் ஓய்வு |
| Father's Name: | அருணாச்சலம் | Religion: | |
| Village: | செட்டியப்பனூர் | Age: | 62 |
| Taluk: | சென்னை | | |

Solemnly affirmed in accordance with the provisions of Chapter X of Indian Evidence Act 1872 Dated : 02.05.2025

பு.த.சா.1 குறுக்கு விசாரணையின் தொடர்ச்சி

நான் ஏற்கனவே முன்பு குறுக்கு விசாரணையில் கூறியவாறு சீட்டு நடத்திவருவதற்கான பேரேடை நீதிமன்றத்திற்கு கொண்டு வந்துள்ளேனா என்றால் இல்லை. நான் ஏற்கனவே எனது நீதிமன்ற சாட்சியத்தில் பேரேடு உள்ளது என கூறியுள்ளேன் என்றால் சரிதான். நான் இன்றைய தேதி வரை சீட்டு நடத்தி வருகிறேன் என்றால் சரிதான். தற்போது சீட்டு எடுத்ததற்காக கையொப்பம் பெறுவேனா என்றால் தற்போது சாட்சி வெறும் பேப்பரில் வாங்கி கொள்வேன். மேற்படி ஆவணத்தை நான் கையில் வைத்துக்கொள்வேனா என்றால் சீட்டு முடியும் வரை வைத்துக்கொள்வேன். இதே நீதிமன்றத்தில் STC 335/2024, STC 446/2024, STC 402/2024, STC 338/2024 இதனுடன் மற்ற 4 வழக்குகளும் இதே காசோலை வழக்குகள் தான் என்றால் சரிதான். மொத்தம் 7 வழக்குகளும் நான் பணம் கடன் கொடுத்ததற்கு கொடுக்கப்பட்ட காசோலைகளா அல்லது சீட்டு நடத்தியதற்காக பாதுகாப்பிற்காக கொடுக்கப்பட்ட காசோலைகளா என்றால் நான் கடனாக பணம் கொடுத்ததற்கான காசோலைகள்.

7 வழக்குகளுக்கான மொத்த தொகை சுமார் ரூ.50,00,000/− இருக்குமா என்றால் இருக்கலாம். நான் கடனாக கொடுத்த ரூ.50,00,000/− ஐ வருமான வரிக் கணக்கில் குறிப்பிட்டுள்ளேனா என்றால் இல்லை. நான் எனது சொந்த காசை கடனாக கொடுக்கும் போது அதை வருமான வரிக் கணக்கில் குறிப்பிட வேண்டும் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். இந்த வழக்கில் எவ்வளவு கடன் தொகை என்றால் ரூ.4,00,000/−. STC 401/2024 எவ்வளவு கடன் தொகை என்றால் ரூ.4,50,000/−. வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பு வழக்கறிஞர் அறிவிப்பிலோ, இக்கசோலை மோசடி வழக்கிலோ அல்லது இந்த வழக்கின் முதன்மை வாக்குமூலத்திலோ பணம் எனக்கு எவ்வாறு வந்தது, எப்படி கொடுக்கப்பட்டது என்ற விவரத்தை குறிப்பிட்டுள்ளேனா என்றால் இல்லை. கு.மு.சா.ஆ.4லிலோ, குற்றம்சாட்டப்பட்டவர் தரப்பு பதிலறிவிப்பிலோ என்ன விவரங்கள் குறிப்பிடப்பட்டுள்ளது என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

குற்றம்சாட்டப்பட்டவர் தரப்பு பதிலறிவிப்பை மறுத்து நான் மறு அறிவிப்பு அனுப்பினேனா என்றால் இல்லை. பதிலறிவிப்பில் மொத்தமாக எதிரி ராஜ்குமாருக்கு எவ்வளவு கடன் தொகை உள்ளது என்பதை குறித்து குறிப்பிடப்பட்டுள்ள விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. எதிரி ராஜ்குமார் எனக்கு எவ்வளவு கடன்தொகை கொடுக்க வேண்டும் என்றால் வட்டியில்லாமல் ரூ.8,50,000/−. எதிரிக்கு இந்த வழக்கில் வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பும்போதோ அல்லது இந்த வழக்கிலோ STC 401 கடன் தொகை குறித்து குறிப்பிட்டு அனுப்பியுள்ளேனா என்றால் இல்லை, (பிறகு சாட்சி தனித்தனி வழக்குகள் என்பதால் குறிப்பிடவில்லை என கூறுகிறார்.) தனித்தனி வழக்குகள் என்றாலும் கடன் வாங்கிய நபர் ஒன்று தான் என்றால் சரிதான். உண்மையாகவே எதிரிக்கு நான் 2 முறை கடன் கொடுத்திருந்தால் வழக்கறிஞர் அறிவிப்பில் குறிப்பிட்டிருப்பேன் என்றாலும் வழக்கில் குறிப்பிட்டிருப்பேன் என்றாலும் தனித்தனி வழக்குகள் என்பதால் ஒரு வழக்கில் இருப்பதை நான் மற்றொரு வழக்கில் குறிப்பிடவில்லை. என்னுடைய கைபேசி எண் 8667844191 என்றால் சரிதான்.

என்னிடம் காட்டப்படும் நகலில் உள்ள புகைப்படம் என்னுடையதா என்றால் என்னுடையது தான். என்னுடைய கைப்பேசியிலிருந்து எதிரிக்கு கடனை திருப்பி கொடுக்காவிட்டால் உங்களுடைய நிலம் நீதிமன்றத்திற்கு

சென்றுவிடும் என மெஜேஜ் அனுப்பியுள்ளேனா என்றால் அது நினைவில்லை. என்னுடைய மொபைல் எண்ணிலிருந்து எதிரிக்கு அனுப்பிய குறுஞ்செய்தியில் அவர் எனக்கு கொடுக்க வேண்டிய தொகை ரூ.3,78,000/− என குறிப்பிட்டு அனுப்பியுள்ளேனா என்றால் அனைத்து கூற்றுகளும் தவறு. என்னுடைய மொபைல் எண்ணிலிருந்து அனுப்பப்பட்ட குறுஞ்செய்தி 2022ம் வருடத்தில் அனுப்பப்பட்டதாக இருக்கலாம் என்றால் இருக்கலாம்.

என்னுடைய நீதிமன்ற சாட்சியத்திலேயே எதிரி எனக்கு சீட்டு பாக்கி தொகையாக ரூ.3,78,000/−மட்டும் தான் சீட்டு பாக்கி தொகை என்றும் தற்போது இவ்வழக்கில் ரூ.4,00,000/− பாக்கி என்றும் STC 401/2024 வழக்கில் ரூ.4,50,000/− எனவும், மோசடியாக இந்த கசோலை மோசடி வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் தவறு. அந்த காலத்தில் நான் குறிப்பிட்ட ரூ.3,78,000/−ஐ முழுமையாக பெற்றுக்கொண்டேன், தற்போது தொடுத்துள்ள வழக்கு என்னுடைய பணி ஓய்வின் மூலம் பெற்ற தொகையிலிருந்து அவர் கேட்டுக்கொண்டதற்கிணங்க 2 சதவீத வட்டியுடன் தருவதாக அவர் ஒப்புக்கொண்டதின்பேரில் எனக்கு வருமானம் தேவைப்பட்டதால் அவருக்கு 2 தவணையாக ரூ.4,00,000/−, ரூ.4,50,000/− கொடுத்து தனித்தனியாக காசோலை பெற்றுக்கொண்டேன், அவர் பணத்தை திரும்ப செலுத்தாததால் இந்த வழக்கை தொடுத்துள்ளேன். ரூ.3,78,000/− எதிரி ஏற்கனவே என்னிடம் வாங்கிவிட்டு திரும்ப கொடுத்த விவரத்தை வழக்கறிஞர் அறிவிப்பிலோ அல்லது வழக்கிலோ குறிப்பிட்டுள்ளேனா என்றால் சொல்ல தேவையில்லை. மேற்படி விவரத்தை நான் குறுக்குவிசாரணையில் தான் கூறியுள்ளேன் என்றால் கேட்டதால் சொன்னேன்.

சாட்சி கையொப்பம்
(ஒம்.) பூபதி

SRIPATHI K

Digitally signed by SRIPATHI K